1974 மார்ச் 21]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் என்னிடத்தில் இப்பொழுது இல்லை. அதைத் தனியாகத்தான் ஆராய வேண்டும்.

நாட்ராம்பள்ளியில் துணைப் பதிவாளர் அலுவலகம்.

*536 **வினா—திரு. டி. சி. திம்மாராய கவுண்டர் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், நாட்ராம்பள்ளியில் துணைப் பதிவாளர் அலுவலகம் திறக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) & (இ) தலைவரவர்களே, வடார்க்காடு மாவட்டம், நாட்ராம்பள்ளியில் துணைப் பதிவாளர் அலுவலகம் திறக்கும் செயற்குறிப்பு யாதொன்றும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. அது மட்டுமல்லாமல், ஆண்டுக்கு 1,500 பதிவுகளாவது பதிவு செய்யப்பட வேண்டும். இல்லையென்றால் நஷ்டத்திற்கு உரியதாகி விடும் என்பதால் அது இப்பொழுது பரிசீலனையில் இல்லை.

பயணியர் விடுதிகள்.

*537 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் நகரில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் பயணிகள் விடுதி ஒன்று கட்டப்பட்டு வருகின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.